தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்கலாம்

தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு அடுத்தப்படியாக இந்தியா மூன்றாவது முக்கிய உற்பத்தியாளராக உள்ளது. 2013-14ம் ஆண்டில் 2.15 மில்லியன் எக்டரில் தென்னை பயிரிடப்பட்டு 16.56 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் சராசரி மகசூல் எக்டருக்கு 5525 கிலோ ஆகும். இந்தியாவிலிருந்து தேங்காய், இங்கிலாந்து, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், (2012-13ல்) தென்னை, கோயம்புத்தூர் (83341 எக்டர்), திருப்பூர் (53661 எக்டர்), தஞ்சாவூர் (34747 எக்டர்), திண்டுக்கல் (29932 எக்டர்), கன்னியாகுமரி (24502 எக்டர்), வேலூர் (22720 எக்டர்), தேனி (19967 எக்டர்), கிருஷ்ணகிரி (15834 எக்டர்) மற்றும் திருநெல்வேலி (15806 எக்டர்) ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டு இவை 71 சதவீதம் தென்னை சாகுபடி பரப்பிலும், 74 சதவீதம் மொத்த தேங்காய் உற்பத்தியிலும் பங்குவகிக்கிறது.

தற்போதைய நிலையில் பொள்ளாச்சி சந்தை பகுதிகளில் தேங்காய் டன்னிற்கு ரூ. 28500 வரை விற்கப்படுகிறது. சராசரியாக 550 - 600 கிராம் எடை அளவு கொண்ட தேங்காயின் விலை ரூ.16 முதல் ரூ.17 வரை விற்கப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டிலிருந்து சந்தைக்கு தேங்காய் வரத்து துவங்கியுள்ளது. கேரளா மற்றும் கர்நாடகவிலிருந்து வரத்து வரும் பிப்ரவரி மாதம் முதல் தொடங்க உள்ளது. நல்ல பருவ மழை பெய்ததன் காரணமாக

வரும் மாதங்களில் தேங்காய் உற்பத்தி அதிகரிக்க தொடங்கும். தற்போது அவல்பூந்துறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை கிலோவிற்கு ரூ.96 – 98 வரை விற்கப்படுகிறது.

இச்சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தையில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் அவல்பூந்துறை சந்தையில் நிலவிய கொப்பரையின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், பொள்ளாச்சி பகுதியில் பண்ணை விலை பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் (டன்னிற்கு ரூ.26000 – ரூ.27000) சராசரி காய் (550 - 600 கிராம் எடை) ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.15 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சிறந்த தரத்தின் காரணமாக பொள்ளாச்சி சந்தையில் தேங்காயின் விலை அதிகமாக இருக்கும். மற்ற சந்தைகளில் பொள்ளாச்சி சந்தையை விட காய் ஒன்றுக்கு சற்று குறைவாகவே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கொப்பரையின் விலை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கிலோவிற்கு ரூ.94 முதல் ரூ.96 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல், 2015 பிறகு தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை ஏறுவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. எனவே, விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி-0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்